சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு /அரசு உதவி பெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகள் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் இந்திய செஞ்சிலுவை சங்க உறுப்பினர் கட்டணத்தை 2017–18 ஆம் கல்வியாண்டு முதல் ரூ.10/-லிருந்து ரூ.20/–ஆகவும், கல்லூரிகளுக்கான பதிவுக்கட்டணத்தை ரூ.20/–லிருந்து ரூ.500/– ஆகவும் உயர்த்துதல் - ஆணை- வெளியிடப்படுகிறது.

**உயர்கல்வி(ஜே2)துறை**

**அரசாணை (நிலை) எண்.342**

**நாள். 30.11.2017**
**ஹேவிளம்பி வருடம், கார்த்திகை – 14 .**
**திருவள்ளுவர் ஆண்டு 2048.**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.206, உயர்கல்வித் (ஜே2) துறை, நாள் 8.10.2013.
2. அரசாணை (நிலை) எண்.183, உயர்கல்வித் (ஜி2) துறை, நாள் 29.8.2016.
3. இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ்நாடு பொதுச் செயலாளர் அவர்களின் கடிதம் எண். A12/YRC/2016, நாள் 26.10.2016.
4. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண் 65786/எச்5/2016 நாள் 22.3.2017 மற்றும் 24.6.2017.

-------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தொழில்நுட்பக் கல்வி துறையின் கீழ் இயங்கிவரும், அரசு /அரசு உதவி பெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகள் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.5/– ஆக வசூலிக்கப்பட்டு வந்த இந்திய செஞ்சிலுவை சங்க ஆண்டு உறுப்பினர் கட்டணத்தை ரூ.10/– ஆக உயர்த்தி வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் கட்டணத்தில் ரூ.6/– ஐ மேற்படி கல்லூரிகளில் இப்பொருள் குறித்த செயல்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், மீதித் தொகை ரூ.4/–ஐ இந்திய செஞ்சிலுவை சங்க தமிழ்நாடு கிளைக்கு வழங்கவும் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டுவரும் அரசு /அரசு உதவி பெறும் / சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் இந்திய செஞ்சிலுவைச் சங்கம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆண்டு உறுப்பினர் கட்டணத்தை ரூ.10/–லிருந்து ரூ.20/– ஆகவும், கல்லூரிகளுக்கான பதிவுக் கட்டணத்தை ரூ.20/–லிருந்து ரூ.50/–ஆகவும், உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கல்லூரிகளில் உயர்த்தப்பட்ட இளைஞர் செஞ்சிலுவைக் கட்டணத்தை போன்று, தொழில்நுட்பக் கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகின்ற அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் பொறியியல் கல்லூரிகளிலும் அதே அளவு உயர்த்தி ஆணை வழங்குமாறு இந்திய செஞ்சிலுவைச் சங்க பொதுச் செயலர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட 22.3.2017 நாளிட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்ற அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், அரசு /அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி மற்றும் பொறியியல் கல்லூரிகளிலும் இந்திய செஞ்சிலுவை சங்கம், இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் ஆண்டு உறுப்பினர் கட்டணத்தை ரூ.10/–லிருந்து ரூ.20/–ஆக உயர்த்துமாறும் கல்லூரிகளுக்கான பதிவுக் கட்டணம் ரூபாய் ரூ.20/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்துமாறும், அவ்வாறு பெறப்படும் உறுப்பினர் கட்டணம் ரூ.20/–லிருந்து ரூ.12/–ஐ மேற்படி கல்லூரிகள் அளவில், இப்பொருள் குறித்த செயல்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், மீதித்தொகை ரூ.8 /– ஐ இந்திய செஞ்சிலுவை சங்க தமிழ்நாடு கிளைக்கு வழங்கவும் அரசின் ஆணையினை தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வேண்டியுள்ளார். மேலும், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட 24.6.2017 நாளிட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னையில் 2015-இல் ஆபத்தான வெள்ளம் தாக்கிய பொழுதும் மற்றும் 2016 வர்தா புயல் ஆகிய இயற்கையின் கொடூரத்தில், இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் ஈடுபாடு போற்றப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மேலும், ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்த பட்சம் 250 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கை பெறுவர் என்ற அடிப்படையில், சேர்க்கை பெற்ற மாணவர் ஒவ்வொருவருக்கும் அந்தக் கல்லூரி ரூ.2/– பதிவுக்கட்டணமாக செஞ்சிலுவை சங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கல்லூரிக்கான பதிவுக்கட்டணத்தை ரூ.500/– ஆகவும் (250%)உயர்த்தி ஆணை வழங்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டதாகவும், மனித உயிர்காக்கும் (இன்னல் காலங்களில் தன்னலம் கருதாமல் தியாக உணர்வோடு பணிபுரியும்) செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களின் நலன் கருதி, செஞ்சிலுவை சங்கத்திற்குரிய கல்லூரிக்கான பதிவு கட்டணத்தை ரூ.500/- ஆக உயர்த்தி ஆணை வழங்குமாறு தொழில்நுட்ப கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 2017–2018 ஆம் கல்வியாண்டு முதல், அரசு /அரசு உதவி பெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகள் / பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்து தற்போது ரூ.10/– ஆக வசூலிக்கப்படும் இந்திய செஞ்சிலுவை சங்க உறுப்பினர் கட்டணத்தை ரூ.20/– (ரூபாய் இருபது மட்டும்) ஆக உயர்த்தியும், அவ்வாறு பெறப்படும் கட்டணத்தில், ரூ.12/–ஐ பொறியியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அளவில் இப்பொருள் குறித்த செயல்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், மீதித் தொகை ரூ.8/–ஐ இந்திய செஞ்சிலுவை சங்க தமிழ்நாடு கிளைக்கு வழங்க வேண்டும் என்றும், கல்லூரிக்களுக்கான பதிவுக் கட்டணத்தை ரூ.20/–லிருந்து ரூ.500/–(ரூபாய் ஐநூறு மட்டும்) ஆகவும் உயர்த்தவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.58017/கல்வி I/2017 நாள். 22.11.2017–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைக் கட்டடம், எண்.50, மான்டியத் ரோடு, எழும்பூர், சென்னை–8

மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை –35
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5
கருவூலக் கணக்குத் தலைவர். சென்னை –15

நகல்
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9
நிதித் (கல்வி–1) துறை, சென்னை –9
உயர்கல்வி (ஜி/பி) துறை. சென்னை–9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, சென்னை–9
அரசாணை (நிலை) எண்.206, உயர்கல்வித்(ஜே2)துறை, நாள் 8.10.2013
அரசாணை (நிலை) எண்.183, உயர்கல்வித்(ஜி2) துறை, நாள் 29.8.2016
உதிரி/இ.கோ.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/11/2017

பிரிவு அலுவலர்

30.11.17